# போதிக்க விரும்பாத போதகன்

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, மோசமான மனிதர்கள் உட்பட யாவர் மேலும் தேவனுக்குள்ள அன்பையும், அவர்கள் மாறுவதற்கு உதவ ஊழியர்களை ஏன் அனுப்புகிறார் என்பதையும் குழந்தைகள் புரிந்து கொள்ள உதவுவீராக."

வயதுக்கும் தேவைக்கும் பொருத்தமான எந்த சிறுவர்க்கான கல்வி **செயல்பாட்டையும்** தெரிந்து கொள்க.

யோனா அதி. 1, அதி. 2 ல் வசனங்கள் 1 & 10, அதி. 3ஆகியவற்றை ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ **வாசிக்கட்டும் அல்லது மனப்பாடமாகக் கூறட்டும்.**

தேவன் யோனாவைப் போதகராக இன்னொரு தேசத்திற்கு அனுப்பினார். மோசமான அந்த மக்களை மனந்திரும்பச் செய்வதற்காகவே அனுப்பினார். தேவன் அந்த மக்களை நேசித்தார். போதகனோ நேசிக்கவில்லை.

பின்வரும் **கேள்விகளைக்** கேட்கவும். *(பதில், ஒவ்வொரு கேள்விக்குப் பின்னும்)*

- தேவன் ஏன் புயலை அனுப்பினார்? *(யோனா 1:3-4)*
- மாலுமிகளிடம் யோனா புயலைக் குறித்து கூறியது என்ன? *(1:12)*



- மாலுமிகள் யோனாவைக் கடலில் போட்ட பின்னும் அவன் ஏன் மூழ்கிப்போகவில்லை? *(யோனா 1:17)*
- யோனாவின் பிரசங்கத்தைக் கேட்ட நினிவேயின் அரசன் என்ன செய்தான்? *(3:6-8. அவன் மனம் திரும்பி மக்களையும் மனந்திரும்பும்படி கூறினான்).*

யோனாவின் கதையின் பகுதிகளை **நாடகமாக்குக.** இந்த சிறு நாடகத்தை நடிக்க சபைத் தலைவரோடு பேசி ஏற்பாடு செய்யவும். நாடகத்தை ஆயத்தம் செய்ய சிறுவர்களோடு உங்கள் நேரத்தை செலவு செய்யவும். பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவட்டும்.

- போதுமான அளவு பிள்ளைகள் இல்லாவிட்டால் சில பாத்திரங்களுக்கு கதை கூறுபவர் குரல் கொடுக்கலாம்.
- **பெரிய பிள்ளைகளோ** பெரியவர்களோ தேவ குரல், யோனா, கதை கூறுபவர் ஆகிய பாகங்களை நடிக்கட்டும்.
- **சிறிய பிள்ளைகள்,** மாலுமிகள், திமிங்கலம், நினிவேயின் இராஜா ஆகிய பாகங்களில் நடிக்கட்டும்.

**கதை கூறுபவர்:** யோனா 1 ல் இருந்து கதையின் முதல் பகுதியைக் கூறட்டும். பின்னர் கூற வேண்டியது: "தேவன் என்ன கூறுகிறார் என்று கேளுங்கள்."

**தேவ குரல்:** "யோனாவே! நினிவேக்கு சென்று அந்த நாட்டு மக்களிடம் அநியாயம் செய்வதை நிறுத்திவிடுமாறு கூறு."

**யோனா** : 'நான் அந்த மக்களை வெறுக்கிறேன். வேறு வழியாகச் செல்லும் ஒரு கப்பலில் ஏறி நான் ஓடிப் போவேன்!"

**மாலுமிகள்:** கப்பலில் பயணம் செய்வது போல அங்கும் இங்கும் அசையவும். இது போல கத்தவும். “இது ஒரு மோசமான புயல்!”

“காற்று கப்பலை கவிழ்த்துவிடும் போல் இருக்கிறது!”

“அலைகள் நம்மை மூழ்கடித்துவிடும்!”

**யோனா :** உறக்கத்தில் இருந்து விழிப்பது போல நடிக்கவும். சத்தமிடுக, “தேவன் என்மேல் கோபமாக இருக்கிறார். என்னைக் கடலுக்குள் எறிந்து விடுங்கள். அப்போது கடல் அமைதியாகிவிடும்!”

**திமிங்கலம்:** யோனாவின் அருகில் நீந்திப் போவது போல நடிக்கவும். கூறுவது, “இது ஒரு வேடிக்கையான மீனாகத் தெரிகிறது. ஆனால் எனக்கே பசி. எனவே இதை நான் விழுங்குகிறேன்!” (விழுங்குவது போல் பாவித்து..) “ஓ! எனக்கு வயிறு ஏன் இப்படி வலிக்கிறது. இதை கக்கிப் போட வேண்டும் போல் இருக்கிறதே!”

**கதை கூறுபவர்:** கதையின் இரண்டாவது பகுதியைக் கூறவும்(யோனா 2:1-10 & 3). பின்,”தேவன் கூறுவது என்னவென்று கேளுங்கள்!”

**தேவகுரல்:** சத்தமாக, “யோனா, நினிவேக்கு போ!”

**யோனா :** “தள்ளாடிய படியே யோனா நினிவே மக்களிடம் சென்று கோபமாக கத்திக் கூறுகிறான், “மனம் திரும்புங்கள் அல்லது தேவன் உங்கள் பட்டிணத்தைக் கவிழ்த்துப் போடுவார்!”

**இராஜா :** துணிகளை கிழிப்பது போல நடித்து, தரையில் அமர்ந்து கூறுவது, “நாங்கள் யாவரும் மனம் திரும்புகிறோம்!”

**தேவகுரல்:** “நீங்கள் மனம்திரும்பியதால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். நான் உங்கள் மேல் அன்பாய் இருக்கிறேன். நான் உங்களை அழிக்க விரும்பவில்லை.”

**கதை கூறுபவர் அல்லது ஒரு பெரிய பிள்ளை:** நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறுதல்.

இந்த நாடகத்தை சிறுவர்கள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் மேலே உள்ள கேள்விகளையும் பெரியவர்களிம் கேட்கவும்.



சிறுவர்கள் ஒரு பெரிய மீனின் படத்தை வரையட்டும். ஆராதனை வேளையின் போது இந்தப் படத்தைப் பெரியவர்களுக்குக் காட்டி தேவன் எவ்வாறு பிற தேசத்து மக்களை நாம் விரும்பாத போதும் விரும்புகிறார் என்பதை விளக்கவும். அவர்களோடு பேசவும், மனம்திரும்பி இயேசுவை விசுவாசிக்கும்படி கூறவும் நம்மை அனுப்புகிறார்.



மனம் திரும்பதலைக் குறித்துக் கூற தலைசிறந்த போதகர்கள் இல்லாத போதும் மோசமான மனிதர்கள் மனம்திரும்பிய உதாரணங்களைப் பற்றிக் கூறுமாறு பிள்ளைகளிடம் கேட்கவும்.

**மனப்பாடம்:** எசே. 14:6

**கவிதை:** யோனா 2:2,3,5,6 ஐ நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

மனம் திரும்பி தேவனுடைய மன்னிப்பை பெறுவது குறித்து நான்கு சிறுவர்கள் பாடலோ கவிதையோ எழுதட்டும்.

**ஜெபம்:** “கர்த்தாவே, எங்களை வெறுக்கும் மக்கள் உட்பட உலகமக்கள் யாவரையும் நீர் நேசிக்கிறீர். நாங்கள் அவர்களுக்காக ஜெபிக்கிறோம். இயேசுவை பற்றிய செய்தியைக் கூற நீர் செய்தியாளர்களை அனுப்புவீராக. எங்களில் இருந்து மாறுபட்ட மக்களுக்கும் உமது செய்தியை எடுத்துச் செல்ல உதவுவீராக.”

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net